தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1988, ஜனவரி 27, புதன்கிழமை

தை 13, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு-2019.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு"

அருள் மிகுந்தவராய் 'அஞ்சவேண்டா' என்று முன் தேற்றியவர் பிரிந்து செல்வாரானால் அவர்கூறிய உறுதிமொழியை நம்பித் தெளிந்தவர்க்குக் குற்றம் உண்டோ?

1. இரங்கற் குறிப்புகள்.

(அ) முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ம. ஆபிரகாம் அவர்கள் 2—12—1987 ஆம் தேதியன்றும், திரு. ஆர். சுப்ப ஐயர் அவர்கள் 9—1—1988 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. ஆபிரகாம் அவர்கள் 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் செங்கற்பட்டு மாவட்டம் ஆலந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார்.

திரு. ஆர். சுப்ப ஐயர் அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை செங்கற்பட்டு பொது கிராமப்புற தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

(ஆ) முன்னாள் உறுப்பினர் திரு. பி. இராமமூர்த்தி மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் 15—12—1987 ஆம் தேதியன்று மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS